ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.
தொலைபேசி : 044– 25670769
நிகரி : 25675849
இணையதளம் : www.tnrd.gov.in

கடிதம் (நிலை) எண். 58, நாள் : 01.02.2010

அனுப்புநர்
திரு க.அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

1. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை – 15.
2. மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி.

அய்யா,

பொருள்: திட்டங்கள் – திருநெல்வேலி மாவட்டம் – 2009–10–ஆம் ஆண்டு முறையே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதி மற்றும் நாடாளுமன்ற உள்ளூர் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்தி திருநெல்வேலியில் பல்நோக்கு உள் விளையாட்டரங்கம் கட்டுவதற்கு அரசு சிறப்பு அனுமதி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண். 24, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 23.05.2008.
2. அரசாணை (நிலை) எண். 61, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16.07.2009.
3. அரசாணை (நிலை) எண். 90, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 11.08.2009.
4. ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அவர்களின் நேர்முக கடித எண்.27429/2009/NEDM.2 நாள் 29.12.2009.
5. மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்களின் நேர்முக கடிதம் எண்.A8/823/2009,நாள் 18.01.2010.

-----

பார்வை ஒன்றில் உள்ள அரசாணையில், திருநெல்வேலியில் ரூ.1.00 கோடி செலவில் பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் ஒன்றைக் கட்ட அரசின் பங்கு தொகையாக ரூ.50.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்தும், எஞ்சிய ரூ.50.00 இலட்சத்தினை திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரால், பொதுமக்கள் மற்றும் சட்டமன்ற, நாடாளுமன்ற

உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து திரட்டப்படவுள்ளதாகவும் தெரிவித்து ஆணையிடப்பட்டிருந்தது.

2. திருநெல்வேலியில் பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் ஒன்று கட்டுவதற்கு, அரசின் பங்குத் தொகை ரூ.50.00 இலட்சம் போக எஞ்சிய ரூ.50.00 இலட்சத்தை பொதுமக்களிடமிருந்து உடனடியாக திரட்டப்பட வாய்ப்பில்லை எனவும், திருநெல்வேலி மாவட்டத்தை சார்ந்த கீழ்கண்ட இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் 8 சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து தலா ரூ.5.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.50.00 இலட்சம் நிதியினை மேற்குறிப்பிட்ட பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் கட்டுவதற்கு பயன்படுத்த தங்களுடைய இசைவினை அளித்துள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளதாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் பார்வை நான்கில் உள்ள தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

| வ. எண் | நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற தொகுதிகளின் பெயர்கள் | திட்டத்தின் பெயர் | இசைவளித்த தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | நாடாளுமன்ற உறுப்பினர், திருநெல்வேலி | MPLADS 2009-10 | 5.00 |
| 2. | நாடாளுமன்ற உறுப்பினர், தென்காசி. | MPLADS 2009-10 | 5.00 |
| 3. | சட்டமன்ற உறுப்பினர், அம்பாசமுத்திரம் | MLACDS 2009-10 | 5.00 |
| 4. | சட்டமன்ற உறுப்பினர், பாளையங்கோட்டை | MLACDS 2009-10 | 5.00 |
| 5. | சட்டமன்ற உறுப்பினர், திருநெல்வேலி | MLACDS 2009-10 | 5.00 |
| 6. | சட்டமன்ற உறுப்பினர், சேரன்மகாதேவி | MLACDS 2009-10 | 5.00 |
| 7. | சட்டமன்ற உறுப்பினர், நாங்குநேரி | MLACDS 2009-10 | 5.00 |
| 8. | சட்டமன்ற உறுப்பினர், ராதாபுரம். | MLACDS 2009-10 | 5.00 |
| 9. | சட்டமன்ற உறுப்பினர், தென்காசி | MLACDS 2009-10 | 5.00 |
| 10. | சட்டமன்ற உறுப்பினர், கடையநல்லூர் | MLACDS 2009-10 | 5.00 |
| | மொத்தம் | | 50.00 |

3. மேற்குறிப்பிட்ட நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் இசைவினை ஏற்று உள்ளூர் தொகுதி மேம்பாட்டு நிதியை மேற்படி பணிக்காகப் பயன்படுத்த அனுமதி வழங்குமாறு கோரும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரின் செயற்குறிப்பினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

4. 2009–10–ம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தினை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறையில், இன்னபிறவற்றுடன், மத்திய மாநில அரசுத் துறைகள் (பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட) மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள், சங்கங்கள் ஆகியவைகளுக்கான அலுவலகக் கட்டிடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுவது தடை செய்யப்பட்ட பணிகளின் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

5. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயற்குறிப்பு மற்றும் அதன் மீதான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. 2009–10–ஆம் ஆண்டு சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி மேற்குறிப்பிட்ட பணியினை எடுத்துச் செய்ய வழிவகை இல்லாதபோதிலும், திருநெல்வேலி மாவட்டம் விளையாட்டு நிகழ்ச்சிகளில் முன்னிலையில் உள்ளதாலும், மேற்படி மாவட்டத்தில் இருந்து விளையாட்டு வீரர்கள் தேசிய மற்றும் மாநில விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்வதாலும், மேற்படி உள்விளையாட்டரங்கம் கட்டுவதற்கு தேவைப்படும் ரூ.1.00 கோடி நிதியில் அரசின் பங்குத் தொகையாக ரூ.50.00 இலட்சம் ஏற்கனவே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளதாலும், எஞ்சிய தொகையான ரூ.50.00 இலட்சத்தை பொதுமக்களிடமிருந்து உடனடியாக திரட்டப்பட வாய்ப்பில்லை என்பதாலும், திருநெல்வேலியில் பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் கட்டும் பணியை எடுத்துச் செய்வதற்கு அரசால் பார்வை (1)-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை ரூ.50.00 இலட்சம் போக எஞ்சிய ரூ.50.00 இலட்சத்திற்கு 2 நாடாளுமன்ற மற்றும் 8 சட்டமன்ற உறுப்பினர்களின் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து தலா ரூ.5.00 இலட்சம் வீதம் 2009–2010ம் ஆண்டின் நிதியிலிருந்து பயன்படுத்த அரசு இந்நிகழ்வினை சிறப்பினமாகக் கருதி மேலே பத்தி நான்கில் குறிப்பிடப்பட்ட சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறையினை தளர்த்தி நடைமுறையிலுள்ள ஒப்பந்தப்புள்ளி சட்டம் மற்றும் விதிகளை பின்பற்றி இந்தப் பணியை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக

நகல்

மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை -9

சம்மந்தப்பட்ட நாடாளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்கள்.